

சென்னை ஆளுநர் மாளிகையில் வியாழக்கிழமை நடைபெற்ற பதவியேற்பு விழாவில், ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர், முதல்வர் ச.ஜோசப் விஜய் மற்றும் அமைச்சர்கள்.

# 23 அமைச்சர்கள் பதவியேற்பு

**சென்னை, மே 21:** தமிழக வெற்றிக் கழகத்தின் (தவெக) 21 எம்எல்ஏக்கள் மற்றும் காங்கிரஸின் 2 எம்எல்ஏக்கள் என மொத்தம் 23 எம்எல்ஏக்கள் வியாழக்கிழமை அமைச்சர்களாக பதவியேற்றுக் கொண்டனர். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த இருவர் அமைச்சரவையில் இடம்பெற்றதன் மூலம் தமிழகத்தில் முதல்முறையாக கூட்டணி அரசு அமைந்துள்ளது.

ஏற்கெனவே, முதல்வர் ச.ஜோசப் விஜய் மற்றும் 9 பேர் கடந்த மே 10-ஆம் தேதி பதவியேற்ற நிலையில், அமைச்சரவையின் பலம் 33-ஆக உயர்ந்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக வெற்றிக்கழகம் 108 இடங்களுடன் தனிப்பெருங்கட்சியாக வெற்றி பெற்றது. இருப்பினும், பெரும்பான்மைக்குத் தேவையான இடங்கள் இல்லாததால், காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்) ஆகிய கட்சிகளின் எம்எல்ஏக்கள் ஆதரவுடன் முதல்வராக ச.ஜோசப் விஜய் கடந்த 10-ஆம் தேதி பதவியேற்றார். அவருடன் தவெகவின் என். ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, கே.ஜி.

## தவெக அமைச்சரவையில் 33 பேர்

அருண்ராஜ், கே.ஏ.செங்கோட்டையன், பி.வெங்கடரமணன், ஆர்.நிர்மல் குமார், ராஜ்மோகன், டி.கே.பிரபு, எஸ்.கீர்த்தனா ஆகிய 9 அமைச்சர்களும் பதவியேற்றனர். கடந்த சனிக்கிழமை அவர்களுக்கான துறைகள் ஒதுக்கப்பட்டன.

இந்நிலையில், அமைச்சரவை வியாழக்கிழமை விரிவாக்கம் செய்யப்பட்டது. ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் 23 அமைச்சர்களுக்கு ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார்.

தமிழகத்தைப் பொருத்தவரை மொத்தம் 35 அமைச்சர்கள் வரையில் நியமிக்க அரசமைப்புச் சட்டத்தில் உச்சவரம்பு உள்ளது. அதன்படி, வியாழக்கிழமை பதவியேற்ற 23 அமைச்சர்களுடன் சேர்த்து இதுவரை தவெக சார்பில் 31, காங்கிரஸ் சார்பில் 2 என 33 பேர் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். மீதமுள்ள இரண்டு இடங்கள் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் (ஐயூஎம்எல்), விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், நம்பிக்கை கோரும் வாக்கெடுப்பின்போது தவெக அரசுக்கு ஆதரவாக வாக்களித்த அதிமுக அதிருப்தி எம்எல்ஏக்களுக்கு அமைச்சரவையில் இடமில்லை என்பதை தவெக உறுதி செய்துள்ளது.

**59 ஆண்டுகளுக்குப் பிறகு:** தமிழக அமைச்சரவையில் காங்கிரஸ் எம்எல்ஏ.க்கள் செ.ராஜேஷ் குமார், பெ.விஸ்வநாதன் ஆகியோர் அமைச்சர்களாகப் பதவியேற்றனர்.

அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில் முதல்வர் ச.ஜோசப் விஜய், அமைச்சர்கள் ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமார், அருண்ராஜ், வெங்கடரமணன், தலைமைச் செயலர் சாய்குமார், நீதிபதிகள், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, அக்கட்சியின் தமிழக மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், மாணிக்கம் தாகூர் எம்.பி., மூத்த தலைவர் பிரவீன் சக்கரவர்த்தி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் பெ. சண்முகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் மு.வீரபாண்டியன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**தொல்.திருமாவளவன் பங்கேற்பு:** முதல்வராக ஜோசப் விஜய் கடந்த 10-ஆம் தேதி சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் பதவியேற்ற நிகழ்வில், விசிக தலைவர் தொல்.திருமாவளவன் பங்கேற்கவில்லை. அப்போது, தவெக ஆட்சி அமைக்க விசிக வெளியில் இருந்து ஆதரவு அளிப்பதாக அறிவித்திருந்தது.

வியாழக்கிழமை நடைபெற்ற அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில் தொல்.திருமாவளவன், தனது கட்சி எம்எல்ஏ வன்னி அரசுடன் பங்கேற்றார்.

## செயற்கை நுண்ணறிவுக்கு (ஏஐ) தனி அமைச்சகம்

தமிழகத்தில் முதல்முறையாக செயற்கை நுண்ணறிவுத் துறை (ஏஐ) அமைச்சகம் உருவாக்கப்பட்டு, அதன் அமைச்சராக ஆர்.குமார் நியமிக்கப்பட்டுள்ளார். கேரளத்திலும் முதல்வர் சதீசன் தலைமையில் அண்மையில் பதவியேற்ற அமைச்சரவையில் செயற்கை நுண்ணறிவு அமைச்சகம் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**முதல்முறையாக 7 பட்டியல் பிரிவு அமைச்சர்கள்:** தமிழக அமைச்சரவையில் இதற்கு முன்பு இல்லாத அளவுக்கு பட்டியல் பிரிவைச் சேர்ந்த 7 அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். அமைச்சரவையில் ராஜ்மோகன், தென்னரசு, காந்திராஜ், லோகேஷ் தமிழ்செல்வன், கமலி, மதன்ராஜ், விஸ்வநாதன் ஆகிய 7 பேர் பட்டியல் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

இது தவிர 4 பெண் அமைச்சர்கள் இடம் பெற்றுள்ளனர். கடந்த 10-ஆம் தேதி நடைபெற்ற முதல்வர், அமைச்சர்கள் பதவியேற்பு விழாவில் கீர்த்தனா அமைச்சராக பதவியேற்றார். வியாழக்கிழமை நடைபெற்ற விழாவில், எஸ். கமலி, கே.ஜெ. ஜெகதீஸ்வரி, சி, விஜயலட்சுமி ஆகிய 3 பெண் அமைச்சர்கள் பதவியேற்றனர்.

## செங்கோட்டையனுக்கு வருவாய்த் துறை ஒதுக்கீடு

அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் வசம் இருந்த நிதித் துறை, மரிய வில்சனுக்கு மாற்றப்பட்டுள்ளது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை கே.ஏ.செங்கோட்டையனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

## புதிய அமைச்சர்கள் – துறைகள்

| | |
|---|---|
| ஸ்ரீநாத் | மீன்வளத் துறை |
| எஸ்.கமலி | கால்நடை வளர்ச்சித் துறை |
| சி.விஜயலட்சுமி | பால்வளத் துறை |
| ஆர்.வி.ரஞ்சித்குமார் | வனத் துறை |
| ர. வினோத் | வேளாண் துறை |
| ராஜீவ் | சுற்றுச்சூழல், மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், காலநிலை மாற்றம் |
| பி.ராஜ்குமார் | வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித் துறை |
| வி.காந்திராஜ் | கூட்டுறவுத் துறை |
| மதன்ராஜா பி. | குறு,சிறு, நடுத்தரத் தொழில்துறை |
| ஜெகதீஸ்வரி கே. | சமூக நலத் துறை, மகளிர் மேம்பாட்டுத் துறை |
| ராஜேஷ்குமார்.எஸ் (காங்கிரஸ்) | சுற்றுலாத் துறை |
| எம்.விஜய் பாலாஜி | நெசவு, கைத்தறித் துறை |
| லோகேஷ் தமிழ்ச்செல்வன் டி. | வணிகவரி மற்றும் பத்திரப்பதிவுத் துறை |
| விஜய் தமிழன் பார்த்திபன் ஏ. | போக்குவரத்துத் துறை |
| எஸ். ரமேஷ் | இந்து சமய அறநிலையத் துறை |
| பெ.விஸ்வநாதன் (காங்கிரஸ்) | உயர் கல்வித் துறை |
| குமார் ஆர். | செயற்கை நுண்ணறிவு (ஏஐ), தகவல் தொழில்நுட்பம், எண்ம சேவை துறை |
| தென்னரசு கே. | அயலக வாழ் தமிழர்கள் நலத் துறை |
| வி.சம்பத்குமார் | பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை |
| ஜெ. முகமது பர்வேஸ் | தொழிலாளர் நலன் துறை, திறன் மேம்பாடு |
| டி.சரத்குமார் | மனிதவள மேம்பாட்டுத் துறை |
| என். மரிய வில்சன் | நிதி, திட்ட மற்றும் மேம்பாட்டுத் துறை |
| விக்னேஷ் கே. | மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை |

# புல்வாமா தாக்குதல் முக்கிய பயங்கரவாதி: அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொலை

**இஸ்லாமாபாத், மே 21:** புல்வாமா பயங்கரவாத தாக்குதலில் மூளையாக செயல்பட்டதாகக் கருதப்படும் பயங்கரவாதியான அர்ஜுமந்த் குல்சார் தார் (எ) ஹம்ஸா புர்ஹான் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.



ஹம்ஸா புர்ஹான்

கடந்த 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி 14-ஆம் தேதி ஜம்முவில் இருந்து ஸ்ரீநகர் நோக்கி 78 பேருந்துகளில் சிஆர்பிஎப் படை வீரர்கள் பயணம் சென்றனர். காஷ்மீரில் புல்வாமா மாவட்டம், அவந்திபோராவில்- ஜம்மு காஷ்மீர் நெடுஞ்சாலையில் துணை ராணுவப் படையினர் வாகனங்கள் வரிசையாக சென்றபோது, வேகமாக வந்த சிறிய கார் துணை ராணுவப் படையினர் சென்ற ஒரு பேருந்து மீது பயங்கரமாக மோதியது. மோதிய வேகத்தில் மிகப்பெரிய சப்தத்துடன் அந்த கார் வெடித்ததில் பேருந்தில் இருந்த 40 துணை ராணுவப் படையினரும் உடல் சிதறி உயிரிழந்தனர்.

நாட்டையே உலுக்கிய இந்த தாக்குதலில் பாகிஸ்தானிலிருந்து செயல்படும் ஜெய்ஷ்-ஏ-முகமது பயங்கரவாத அமைப்பு பொறுப்பேற்றது.

இந்தத் தாக்குதலுக்கு அந்த அமைப்பைச் சேர்ந்த பயங்கரவாதி ஹம்ஸா புர்ஹான் மூளையாக செயல்பட்டது தெரியவந்தது.

இந்த நிலையில், பயங்கரவாதி ஹம்ஸா புர்ஹான் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதாக செய்தி வெளியாகியுள்ளது.

முஸாஃபராபாத் பகுதியில் மிக அருகில் இருந்தபடி அடையாளம் தெரியாத நபர்கள் பல முறை சுட்டுள்ளனர்.

இதில் பலத்த குண்டு காயமடைந்த ஹம்ஸா புர்ஹான் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

# மாணவர் பரிமாற்றத் திட்டம்: ஜப்பான் செல்லும் அரசுப் பள்ளி மாணவர்கள்



தலைமைச் செயலகத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகனை வியாழக்கிழமை சந்தித்து வாழ்த்து பெற்ற மாணவர் பரிமாற்றத் திட்டத்தில் ஜப்பான் செல்ல உள்ள மாணவர்கள் மற்றும் ஆசிரியர். உடன், பள்ளிக் கல்வித் துறைச் செயலர் சந்தரமோகன், பள்ளிக் கல்வி இயக்குநர் ச.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ் உள்ளிட்டோர்.

**சென்னை, மே 21:** மாணவர் பரிமாற்றத் திட்டத்தின் கீழ் தமிழக அரசுப் பள்ளி மாணவர்கள் சென்னையிலிருந்து வெள்ளிக்கிழமை (மே 22) ஜப்பான் செல்ல உள்ளனர்.

ஜப்பான் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் சார்பில் சகுரா சயின்ஸ் உயர்நிலைப் பள்ளி பரிமாற்றத் திட்டம் என்ற சர்வதேச கல்வி மற்றும் அறிவியல் பரிமாற்றத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் பங்கேற்க தமிழகத்தில் வி.ரோகித் குமரன் (அரசு மாதிரிப் பள்ளி, வேப்பலோடை, தூத்துக்குடி), ஆர். அர்னால்ட் ஜாக் ஆலிவர் (அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, கூடலூரர், நீலகிரி), எம். லக்ஷிதா (அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி, மறைமலை நகர், செங்கல்பட்டு), எம். கனிஷ்கா (அரசு மேல்நிலைப் பள்ளி, கணபதிபாளையம், ஈரோடு) ஆகிய நான்கு மாணவர்கள், ராமநாதபுரம் மாவட்டம் எமனேஸ்வரம் எஸ்.என்.வி. அரசு மாதிரி மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் என். மாலை ஈஸ்வரி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாணவர்கள் தென்னிந்திய அறிவியல் கண்காட்சியில் (எஸ்ஐஎஸ்எஃப்) சிறப்பாகப் பங்கேற்று வெற்றி பெற்ற மாணவர்களிலிருந்து தேர்வு செய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 56 மாணவர்கள் ஜப்பான் அழைத்துச் செல்லப்பட்டு, அந்நாட்டின் மேம்பட்ட அறிவியல், தொழில்நுட்பம், கல்வி முறை மற்றும் கலாசார அனுபவங்களை நேரடியாக அறிந்து கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படுகிறது.

இதற்காக தமிழக அரசுப்பள்ளி மாணவர்கள், மேற்பார்வையாளராக செயல்படும் ஆசிரியர் ஆகியோர் சென்னை விமான நிலையத்திலிருந்து வெள்ளிக்கிழமை பகல் 1 மணிக்கு தில்லி வழியாக ஜப்பான் செல்கின்றனர். மே 31-ஆம் தேதி அவர்கள் தமிழகம் திரும்ப உள்ளனர்.

முன்னதாக அவர்கள், சென்னை தலைமைச் செயலகத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகனை வியாழக்கிழமை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். பள்ளிக் கல்வித் துறைச் செயலர் பி.சந்தரமோகன், இயக்குநர் எஸ்.கண்ணப்பன், தொடக்கக் கல்வி இயக்குநர் பூ.ஆ.நரேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

KPR IAS Academy
Institute for IAS, IPS, IFS and TNPSC Exams
Learn Beyond
No. 5, AKS Nagar, Near Gandhi Park, Coimbatore - 641 001

# முன்னெடுக்கப்பட்ட மூன்றாவது வாய்ப்பு



மு. சிபிகுமரன்

அரசியல் மாற்றம்- அதிகாரம் மாற்றம் என்பது தமிழ்நாட்டுக்கு புதியதல்ல; ஆனால், நிகழ்ந்திருப்பது அடிப்படை மாற்றம் என்பதால் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் கவனம் பெற்றுள்ளன. தமிழக வரலாற்றில் எதிர்பாராத திருப்புமுனையாக இந்த மாபெரும் அரசியல் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

அரசியல் களத்தில் அதிகாரத்தில் இருக்கிற சிலருக்கு இழப்பும் இல்லாத சிலருக்கு வாய்ப்பும் மாறி வந்து திருப்பம் தருதல் என்பது வழக்கமான ஒன்றுதான். எனினும், தமிழ்நாட்டின் தற்போதைய அரசியல் களம் 60 ஆண்டு கால நெடிய வரலாற்றை புரட்டிப் போட்டுள்ளது. அது மட்டுமல்ல, யாருக்கும் அறுதிப் பெரும்பான்மை இல்லாத சட்டப்பேரவையாக நிலைத்தன்மைக்கும் சோதனைக்காலமாக ஒரு விந்தையான தீர்ப்பை தமிழ்நாட்டு மக்கள் வழங்கி உள்ளனர்.

தனி ஒருவரின் நாயக பிம்பத்தின் தாக்கம் தமிழ்நாட்டின் குக்கிராமம்வரை ஊடுருவிப் பாய்ந்துள்ளதை நாம் காண்கிறோம். கடந்த காலங்களில் இது போன்ற பல்வேறு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஆயினும், இத்தகைய விரைவான பலனைத் தந்ததில்லை என்று நாம் கூறமுடியும். இந்த மாற்றத்துக்கு எண்ணற்ற காரணங்கள் இருக்கின்றன. எனினும், முதன்மையான காரணமாக சமூக ஊடகங்களின் வலிமையை உணர்ந்து மக்களின் ஏகப்பெருமுகக்கு ஆகாசமாக ஒரு பாய்ச்சலை நிகழ்த்தி அது வாக்குகளாக மாற்றம் பெற்றுள்ளதாய் நாம் கொள்ளமுடியும்.

அதனால், 60 ஆண்டுகளுக்குப் பிறகு திராவிட இயக்கப் பின்னணி இல்லாத ஒரு கட்சி தனிப்பெரும்கட்சியாக உருவெடுத்து ஆட்சி அமைத்துள்ளது. மேலும், நவீனத்துவத்தின் புதிய இயல்புகளை அடையாளம் காண்பது அரசியலில் மிக முக்கியமான தேவைகளுள் ஒன்று என்பதையும் இந்தத் தேர்தல் முடிவுகள் அரசியல் கட்சிகளுக்கு உணர்த்தியுள்ளன.

சித்தாந்த மாற்றங்களை முன் வைப்பதிலும் ஏற்றுக் கொள்வதிலும் போற்றிப் பாதுகாப்பதிலும் தமிழ்நாடு என்றுமே தனித்துவம் பெற்ற மாநிலமாக விளங்குகிறது. பணமும் திட்டங்களும் மட்டுமே சித்தாந்த வெற்றியை தக்கவைப்பதில்லை என்பதுடன் காரணகாரியத் தொடர்புகளுடன் சுயமரியாதைச் சிந்தனையின் நீட்சி புதிய வடிவத்தின் தேடலை வெளிப்படுத்தியுள்ளதை இந்தத் தேர்தல் முடிவுகள் மூலம் நாம் காண்கிறோம். இது புதிதாக ஜனநாயகக் கடமையை ஆற்றியுள்ள இளைய தலைமுறை வாக்காளர்களின் எச்சரிக்கை மணி எனக் கொள்ளலாம். இனி வருகிற காலத்தில் இன்று வெற்றி பெற்றவர்களுக்கும் இது பொருந்தக் கூடியதாக விளங்கக்கூடும்.

இந்தத் தேர்தலைப் பொருத்தவரை ஒரு முக்கியக்கூறாக விளங்குவது தலைமுறை இடைவெளி ஆகும். அது எப்போதும் புலனுக்கு எளிதில் புலப்படாத சில தன்மைகளை தன்னகத்தே கொண்டதாக உள்ளது. மனிதகுலத்தின் கூட்டுத் தேவைகளும் அதன் பகிர்வும் என்ற நிலையிலிருந்து தனிப்பட்ட தேவைகளும் அதை எவ்வாறேனும் நிறைவு செய்து கொள்ளும் போக்கும் என்ற நிலைக்கு இன்றைய தலைமுறை மாறியுள்ளது. இந்த அடிப்படையில்தான் இந்தத் தேர்தல் முடிவுகளை நாம் நோக்குதல் வேண்டும்.

இந்தத் தேர்தலில் ஓர் அரசியல் கட்சியின் வெற்றிக்கும் மற்றொரு கட்சியின் பின்னடைவுக்கும் தனி நபர்களோ, கூட்டு முயற்சியின் பலவீனமோ காரணம் அல்ல. மாறாக, முந்தைய தலைமுறையால் சரியான முறையில் புரிந்து கொள்ளப்படாத இளைய தலைமுறையின் ஆழ்மன வெளிப்பாடுகளின் விளைவு என்றே கொள்ள வேண்டும்.

ஒரு தத்துவம் நிராகரிக்கப்படுகிற சூழலில் அதை மறுதலித்து பெரும்பான்மையான இளைய தலைமுறை வாக்காளர்கள் தமிழ்நாட்டில் மக்களாட்சிக்கான புதிய பரிமாணத்தை எதிர்பார்க்கத் தொடங்கியுள்ளனர். அதைப் புரிந்து கொள்வதில் உள்ள தெளிவு மற்றும் தெளிவற்ற நிலை ஆகிய வேறுபட்ட புள்ளிகளில் தொடர்பற்று நிற்கிற இளைய மற்றும் சற்று முந்தைய தலைமுறையினரின் மாற்றுக்கோண வெளிப்பாடு இந்தத் தேர்தலில் தெளிவாகவே எதிரொலித்துள்ளது. அதனால்தான் வாக்காளர்களின் எதிர்பார்ப்பும் ஓர் அரசியல் கட்சியின் அணுகுமுறையும் பெருமளவு ஒன்றை ஒன்று நிறைவு செய்யக் கூடியதாக இருக்கிற போது வேட்பாளர் குறித்த எந்த அறிமுகத் தேவையும் இன்றி புதுமுகங்கள் வெற்றி பெற்றுள்ளனர். அவ்வாறு நிறைவு செய்யாத சூழலில் அறிமுகமான முகங்கள்கூட வெற்றி வாய்ப்பை இழந்துள்ளனர்.

**இளைய தலைமுறை வாக்காளர்கள் குறிப்பாக பெண்கள் உரிமை, உணர்வு மற்றும் பண்பாட்டு ரீதியாக மாற்று வடிவம் பெற்று வருவதைக் கவனத்தில் கொள்ளாது மேலோட்டமாக அணுகியதால் கணிப்புகள் தவறின என்றும் கூறலாம்.**

தேர்தல் தொடர்பான வழக்கமான அணுகுமுறைக்கும் இன்றைய சமூக ஊடகங்களின் வழி முன்னெடுக்கப்படும் வீரியமான ஊடுருவலுக்கும் இடையே மிகப் பெரிய இடைவெளி உள்ளது. இது வியப்பையும் அதிர்ச்சியையும் தரும் வகையில் கணிப்புகளைப் புறந்தள்ளி பல ஊகங்களை நகைப்புக்குரியதாக்கி எதிர்பாராத முடிவுகளைத் தந்துள்ளது. இளைய தலைமுறை வாக்காளர்கள் குறிப்பாக பெண்கள் உரிமை, உணர்வு மற்றும் பண்பாட்டு ரீதியாக மாற்று வடிவம் பெற்று வருவதைக் கவனத்தில் கொள்ளாது மேலோட்டமாக அணுகியதால் கணிப்புகள் தவறின என்றும் கூறலாம். ஆகவே, அரசியல் வெற்றியை விரும்புபவர்கள் மாறிவரும் சமுதாய நடைமுறைக்கேற்ப தங்களை தகவமைத்துக் கொள்ள வேண்டும் என்பது மிக நுட்பமாக உணர்த்தப்பட்டுள்ளது.

சலிப்பூட்டுகிற இலவசங்களின் வாக்குறுதிகளில் இருந்தும், அதைத் தொடர்ச்சியாக விளம்பரப்படுத்துவதிலிருந்தும் அரசியல் கட்சிகள் வெளியே வரவேண்டும்.

மக்களின் தேவைகள் இலவசங்களின் வழியே நிறைவு செய்யப்படுவதில் இருந்து மாற்றம் வேண்டும். அதற்கான ஆக்கபூர்வமான வழியை அரசியல் கட்சிகள் கண்டறிதல் வேண்டும் என்ற இடத்துக்கு தமிழ்நாட்டு இளைய தலைமுறை வாக்காளர்கள் முன்னேறியுள்ளனர்.

இதை அரசியல் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும். இதிலிருந்து நழுவி இறுதியாக வாக்குக்கு பணம் மூலம் வெற்றியைத் தீர்மானிக்கலாம் என்ற எண்ணத்தின் தோல்வி முகத்தின் தொடக்கப் புள்ளியே இந்தத் தேர்தல் முடிவுகள் ஆகும். ஆட்சியாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் மீது இருந்த பல ஆண்டுகளின் குமுறல்கள், தொடர்ச்சியான உதாசீனப்படுத்தல்கள், மற்றும் ஆணவப் போக்கு போன்றவற்றால் எழுந்த வெறுப்புணர்ச்சியை மக்கள் வெளிப்படுத்தத் தொடங்கியுள்ளனர் என்பதை உணர்தல் மிகவும் முக்கியம். ஆதலால், மக்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்குமான இடைவெளி குறைக்கப்பட்டு இணைந்து செயல்படுகிற பந்தம் உருவாக்கப்பட வேண்டும் என்பது இளைய தலைமுறை வாக்காளர்களின் பெரும்பான்மை எண்ணமாக இருக்கிறது. இதை உணர்ந்து கொள்ளுதல் அரசியல் முன்னெடுப்பாளர்களுக்கு எதிர்கால வாய்ப்புகளைச் சாதகமாக்க கூடும்.

குழந்தைகள் பெற்றோரை பெரியவர்களை நிர்ப்பந்தம் செய்தார்கள் என்றும் குழந்தைகளுக்காக பெரியவர்கள் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சிக்கு வாக்களித்தார்கள் என்றும் கூறுகிற காரணங்கள் இன்று பேசுபொருளாகி உள்ளன. அது அடிப்படை ஆதாரமற்ற வாதமாகும். பொதுமக்களும் வாக்காளர்களும் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களால் தெரிந்தோ தெரியாமலோ உதாசீனப்படுத்தப்பட்டு வந்ததே இதற்கு முதன்மையான காரணமாக இருக்க முடியும்.

மக்களாட்சியின் சக்தி என்பது அசுர வலிமை கொண்டது என்பதை தமிழ்நாட்டு மக்கள் இந்தத் தேர்தலில் நிரூபித்துள்ளனர். மக்களாட்சியின் மீது மாறா பற்று கொண்டு வாக்களித்த ஒவ்வொருவரைச் சுற்றியும் வெளிப்படுத்த வாய்ப்பு இல்லாத எண்ணற்ற கேள்விகளும் நிராகரிப்புகளும் இருந்துள்ளன. இந்த நிராகரிப்புகளின் கூட்டு வெளிப்பாட்டை மக்கள் அமைதி வழியில் புலப்படுத்தியுள்ளனர். இதன் காரணமாகவே மூன்றாவது வாய்ப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, தேர்தலை எதிர்கொண்ட தமிழக அரசியல் கட்சிகள் மனசாட்சிக்கு விரோதமின்றி தங்களை சுய பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் தந்துள்ள தீர்ப்பு தற்காலிகமானதே; நிரந்தரமானதல்ல. மக்களின் நலன்கள் காக்கப்படுவதற்கான பல்வேறு கொள்கைப் பின்னணி கொண்ட அரசியல் இயக்கங்கள் வலிமையுடன் செயல்படுதல் ஜனநாயகக் கட்டமைப்பின் உறுதிப்பாட்டுக்கு மிகவும் அவசியமானது.

இன்றைய தலைமுறையின் எண்ண ஓட்டங்களையும் எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொள்ள வேண்டிய தேவை மக்கள் பிரதிநிதிகளுக்கும் அரசியல் முன்னெடுப்பாளர்களுக்கும் பெற்றோருக்கும் ஏற்பட்டுள்ளது. பெரிய விலை கொடுத்து வெற்றியை வாங்கலாம். ஆனால், உண்மையாகக் கூறவேண்டுமென்றால் தமிழ்நாட்டின் இரு பெரும் திராவிட இயக்கங்களும் இன்று பெரிய விலை கொடுத்து தோல்வியை வாங்கியுள்ளன.

இதைப் படிப்பினையாகக்கொண்டு வாக்களித்த மக்களின் நம்பிக்கையைப் பெறுவதற்காக கடுமையான சவால்களை ஏற்றுக்கொண்டு பயணிப்பதில்தான் புதிய அரசின் வெற்றி அடங்கி உள்ளது. எளிய மக்கள் எளிதில் அணுகக் கூடிய வகையில் மக்கள் பிரதிநிதிகளும் அதிகாரிகளும் இருப்பது மட்டுமல்லாது, அவர்களின் பிரச்னைகளை காது கொடுத்துக் கேட்கும் வகையில் நிர்வாக முறைகளும் எளிமைப்படுத்தப்பட வேண்டும்.

வெற்றி பெற்ற அரசியல் கட்சி இவற்றைக் கருத்தில் கொண்டு செயலாற்ற வேண்டும். ஏனென்றால் இளைய தலைமுறையினரும் பெண்களும் பெரிதும் விழிப்புணர்வு கொண்டவர்களாக மாறி வருகின்றனர். ஆதலால், வாக்குறுதிகளைப் புறந்தள்ளி புதிய உத்திகளைப் பயன்படுத்தி வாக்காளர்களை மற்றொரு முறை சமரசப்படுத்துகிற முயற்சி இனிவரும் காலங்களில் வெற்றியை ஈட்டித் தராது என்பது உறுதி.

கட்டுரையாளர்:
கல்வியாளர்.

# 5 நாடுகள் பயணம் நிறைவு: நாடு திரும்பினார் பிரதமர்

## முக்கிய ஒப்பந்தங்கள், 3 உயரிய விருதுகள்


இத்தாலியின் ரோம் நகரில் புதன்கிழமை பிரதமர் மோடிக்கு உயரிய அக்ரிகோலா பதக்கத்தை வழங்கி கௌரவித்த ஐ.நா. உணவு மற்றும் வேளாண் அமைப்பின் தலைமை இயக்குநர் க்யூ டோங்யூ.

புது தில்லி, மே 21: ஐந்து நாடுகள் அரசுமுறைப் பயணத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த பிரதமர் நரேந்திர மோடி வியாழக்கிழமை நாடு திரும்பினார். அவரது இந்தப் பயணத்தின்போது, எரிசக்தி, பாதுகாப்பு, முக்கியக் கனிமங்கள் உள்ளிட்ட துறைகளில் முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. பிரதமர் மோடிக்கு மூன்று உயரிய விருதுகளும் வழங்கப்பட்டன.

வளைகுடா நாடான ஐக்கிய அரபு அமீரகம், ஐரோப்பிய நாடுகளான நெதர்லாந்து, ஸ்வீடன், நார்வே, இத்தாலி ஆகிய ஐந்து நாடுகளுக்கு 6 நாள்கள் அரசுமுறைப் பயணத்தை பிரதமர் மோடி கடந்த மே 15-ஆம் தேதி தொடங்கினார்.

ஐக்கிய அரபு அமீரகம்: முதல் கட்டமாக ஐக்கிய அரபு அமீரகத்துக்கு பயணமான அவர், அந்நாட்டின் அதிபர் ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யானுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

அமெரிக்கா-இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையே கடந்த பிப்ரவரியில் போர் மூண்ட பிறகு மேற்காசிய பிராந்தியத்துக்கு பிரதமர் மோடி மேற்கொண்ட முதல் பயணம் இதுவாகும். ஹோர்முஸ் நீரிணை முடக்கத்தால் கச்சா எண்ணெய் ஏற்றுமதி தடைபட்டு, இந்தியா உள்பட பல்வேறு நாடுகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதமரின் பயணம் முக்கியத்துவம் பெற்றது.

ஐக்கிய அரபு அமீரக அதிபர் உடனான பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தியாவின் உத்திசார் பெட்ரோலிய கையிருப்பை விரிவுபடுத்துதல், நீண்ட கால எல்பிஜி விநியோகம், பாதுகாப்பு, கப்பல் போக்குவரத்து தொடர்பாக முக்கிய ஒப்பந்தங்கள் கையொப்பமாகின. இந்தியாவில் 5 பில்லியன் டாலர் முதலீடுகளை மேற்கொள்ளவும் ஐக்கிய அரபு அமீரகம் உறுதியளித்தது.

நெதர்லாந்து: இதைத்தொடர்ந்து, நெதர்லாந்துக்குப் பயணித்த பிரதமர் மோடி, அந்நாட்டின் பிரதமர் ரோப் ஜெட்டனுடன் விரிவான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். இருதரப்பு உறவுகள் உத்திசார் கூட்டுறவு அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டதுடன், முக்கியக் கனிமங்கள், செமிகண்டக்டர், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, இடப்பெயர்வு-போக்குவரத்து உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்தும் 17 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன.

ஸ்வீடன்: ஸ்வீடன் பயணத்தின்போது, வர்த்தகம், தொழில்நுட்பம், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை விரிவாக்குவது குறித்து அந்நாட்டு பிரதமர் உல்ஃப் கிறிஸ்டர்சனுடன் பிரதமர் மோடி விரிவாக விவாதித்தார். ஸ்வீடனின் உயரிய 'தி ராயல் ஆர்டர் ஆஃப் தி போலார் ஸ்டார், டிகிரி கமாண்டர் கிராண்ட் கிராஸ்' விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டது.

நார்வே: ஸ்வீடனில் இருந்து நார்வேக்கு பயணமான பிரதமர், பசுமை எரிசக்தி, வர்த்தகம், நிலையான வளர்ச்சி, நீலப் பொருளாதாரம், ஆர்டிக் ஆராய்ச்சி, எண்மமயமாக்கல் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டின் பிரதமர் ஜோனஸ் கர் ஸ்டோருடன் ஆலோசித்தார். இந்தியா-நார்டிக் நாடுகள் இடையிலான மூன்றாவது உச்சிமாநாட்டிலும் பங்கேற்றார். நார்வே நாட்டின் உயரிய 'தி கிராண்ட் கிராஸ் ஆஃப் தி ராயல் நார்வீஜியன் ஆர்டர் ஆஃப் மெரிட்' விருது பிரதமருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இத்தாலி: தனது பயணத்தின் இறுதிக்கட்டமாக இத்தாலிக்கு சென்ற பிரதமர் மோடி, வர்த்தகம், முதலீடு, கலாசார தொடர்பு, செயற்கை நுண்ணறிவு, முக்கியக் கனிமங்கள், விண்வெளி மற்றும் அணுசக்தி துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு பிரதமர் ஜார்ஜியா மெலோனியுடன் ஆலோசித்தார். இந்திய-இத்தாலி உறவுகள், சிறப்பு உத்திசார் கூட்டுறவு அந்தஸ்துக்கு உயர்த்தப்பட்டது.

உணவு பாதுகாப்பு, நிலையான வேளாண்மை, கிராமப்புற மேம்பாட்டுக்கான பிரதமர் மோடியின் சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், ஐ.நா. உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (எஃப்ஏஓ) சார்பில் அக்ரிகோலா பதக்கம் ரோம் நகரில் அவருக்கு வழங்கப்பட்டது.

## பட்டு சால்வை, சிவப்பு அரிசி.. பிரதமரின் பிரத்யேக பரிசுகள்

ஐந்து நாடுகள் பயணத்தின்போது, வெளிநாட்டுத் தலைவர்களுக்கு இந்தியப் பாரம்பரியத்தைப் பறைசாற்றும் பிரத்யேக பரிசுகளை பிரதமர் மோடி வழங்கி மகிழ்வித்தார். இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனிக்கு அஸ்ஸாமின் தங்கப் பட்டு என்ற சிறப்புக்குரிய முகா பட்டு சால்வை மற்றும் மணிப்பூரில் புகழ்பெற்ற ஷிருய் லில்லி பட்டு சால்வை, இத்தாலி அதிபர் செர்ஜியோ மட்டரெல்லாவுக்கு புகழ்பெற்ற ஹிந்துஸ்தானி பாடகர் பண்டிட் பீம்சேன் ஜோஷி, கர்நாடக இசைப் பாடகி எம்.எஸ்.சுப்புலட்சுமியின் இசை குறுந்தகடுகள் அடங்கிய கலை வேலைபாடுகள் கொண்ட பளிங்குப் பெட்டி, நெதர்லாந்து பிரதமர் ரோப் ஜெட்டனுக்கு மீன் உருவம் கொண்ட மதுபனி ஓவியம், நெதர்லாந்து மன்னர் வில்லியம் அலெக்ஸாண்டருக்கு ஜெய்ப்பூரின் நீல மண்பாண்டம், அரசி மேக்ஸிமாவுக்கு ராஜஸ்தானின் மீனாகரி-குந்தன் காதணிகள், ஸ்வீடன் பிரதமர் உல்ஃப் கிறிஸ்டர்சனுக்கு லடாக்கின் தூய கம்பளி சால்வை, ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சையத் அல் நஹ்யானுக்கு 'மாம்பழங்களின் அரசி' என அறியப்படும் குஜராத் கேசர் மாம்பழங்கள் மற்றும் மேகாலய அன்னாசிப் பழங்கள், நார்வே பிரதமர் ஜோனஸ் கர் ஸ்டோருக்கு உலர்த்தப்பட்ட ஆர்க்கிட் மலர் ஓவியம், ஐ.நா. உணவு மற்றும் வேளாண் அமைப்பின் தலைமை இயக்குநர் க்யூ டோங்யூவுக்கு கேரள மாநிலம், பாலக்காட்டில் விளையும் சிவப்பு அரிசி உள்பட இந்திய பாரம்பரிய அரிசி ரகங்களை பிரதமர் மோடி பரிசளித்தார்.

# மத்திய அரசு அனுமதி அளித்ததும் மேக்கேதாட்டு அணைத் திட்டத்துக்கு அடிக்கல்

## கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார்



சாமராஜ்நகர், மே 21: மத்திய அரசு அனுமதி அளித்ததும் மேக்கேதாட்டு அணை திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்படும் என கர்நாடக துணை முதல்வர் டி.கே.சிவகுமார் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கர்நாடக மாநிலம், சாமராஜ்நகர் மாவட்டம், கொள்ளேகாலில் செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியது:

மேக்கேதாட்டு அணை திட்டத்துக்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்துக்காக தனி அலுவலகம் திறக்கப்பட்டுள்ளது. மேக்கேதாட்டு அணை திட்டத்தால் மூழ்கவுள்ள வனப்பகுதிக்கு ஈடாக வழங்குவதற்கான மாற்று நிலத்தை அடையாளம் காணும் பணி நடைபெற்று வருகிறது.

விரிவான திட்ட அறிக்கையை (டிபிஆர்) விரைவில் மத்திய அரசிடம் ஒப்படைப்போம். மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும், மேக்கேதாட்டு அணை திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்படும்.

காவிரி நதிப்படுகையில் இருந்து தமிழகத்துக்கு 177 டிஎம்சி தண்ணீர் விடுவிக்க வேண்டும் என உத்தரவில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த பிரச்னைக்கு தீர்வுகாண்பது குறித்து விரைவில் கலந்தாலோசிப்பேன். மேக்கேதாட்டு அணை திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்க தமிழகத்துக்கு உரிமை இல்லை என்றும், இது தொடர்பாக மத்திய நீர் ஆணையம்தான் முடிவு செய்ய வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் கூறியுள்ளது.

கர்நாடகத்தில் காங்கிரஸ் அரசு 3 ஆண்டுகளை நிறைவுசெய்துள்ளது. 5 வாக்குறுதிகளை தவிர, 6-ஆவது வாக்குறுதியாக நில உரிமையாளர் மற்றும் சொத்தின் புகைப்படங்களுடன் கூடிய நிலப் பட்டாக்களை வழங்கி வருகிறோம்.

நிகழாண்டில் போதுமான மழை பெய்யாவிட்டால் எழும் குடிநீர் பிரச்னையை எவ்வாறு சமாளிப்பது, விவசாயிகளை எவ்வாறு காப்பது என்பது குறித்து விவாதித்து வருகிறோம்.

கிரேட்டர் பெங்களூரு ஆணையத்துக்கு உள்பட்ட 5 மாநகராட்சிகளுக்கு தேர்தல் நடத்தும் பொறுப்பு மாநில தேர்தல் ஆணையத்திடம் உள்ளது. தேர்தலை நடத்த அரசு முழு ஒத்துழைப்பை அளிக்கும். திட்டமிட்டபடி தேர்தல் நடத்துவதற்கான முன்னேற்பாடுகளில் அரசு ஈடுபடும். நான் எப்போது முதல்வராவேன் என்பதை காலம்தான் தீர்மானிக்கும் என்றார்.